ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2022 சனவரி 31 |


# வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் - 2022 திசெம்பர்

## முக்கிய பண்புகள்

- 2022 காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் கொண்டிருந்து மிகவும் உயர்ந்தளவிலான ஏற்றுமதிகளைப் பதிவுசெய்த அதேவேளையில் இறக்குமதிகள் மீதான செலவினம் 2021 காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2022இல் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.
- 2010 ஆண்டிற்குப் பின்னர் 2022இல் தாழ்ந்தளவிலான வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை பதிவுசெய்யப்பட்டது.
- அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.
- தொழிலாளர் பணவனுப்பல்கள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் மிதமடைந்து காணப்பட்டபோதிலும். சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்களின் மீட்சியானது 2022இல் தொடர்ச்சியாகக் காணப்பட்டு குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினைக் காண்பித்தது.

### வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் (ஐ.அ.டொ பில்)

**ஏற்றுமதிகள்**







| வர்த்தகப் பற்றாக்குறை | திசெ | சன-திசெ |
|---|---|---|
| 2021 | 1.1 | 8.1 |
| 2022 | 0.4 | 5.2 |

**இறக்குமதிகள்**




### சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள்




### தொழிலாளர் பணவனுப்பல்கள் (ஐ.அ.டொ மில்)




### மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்*




* சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது

### கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தேறிய உட்பாய்ச்சல்கள் (முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் - தேறிய) (ஐ.அ.டொ மில்)




### அரசாங்கத்திற்கான மொத்த உட்பாய்ச்சல்கள் (ஐ.அ.டொ மில்)




*நீண்டகாலக் கடன்களிற்கான ஒன்றுசேர்ந்த தரவுகள் 2022 நவெம்பர் வரையான வெளிநாட்டுக் கடன்களை மாத்திரம் உள்ளடக்கியள்ளன.

### வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள் (ஐ.அ.டொ/ரூபா)



## 2022இல் வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம்

ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022இல் முதற் தடவையாக ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 13 பில்லியனை விஞ்சிக் காணப்பட்டு, 2021இல் பதிவுசெய்யப்பட்ட முன்னைய உயர்ந்தளவிலான பெறுமதியிலிருந்து 4.9 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. இம்மேம்பாடானது ஆடைகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பொறி மற்றும் பொறியியல் சாதனங்கள் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் என்பன உள்ளடங்கலாக கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்ததான அதிகரித்த வருவாய்களின் பெறுபேறாகும். அதேவேளை, அவசரமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் 2022இன் பெரும்பாலான காலப்பகுதியில் சந்தையில் நிலவிய திரவத்தன்மை கட்டுப்பாடுகள் என்பவற்றின் விளைவாக மொத்த இறக்குமதிச் செலவினம் 2022இல் ஐ.அ.டொலர் 18,291 மில்லியனாக விளங்கி 11.4 சதவீத ஆண்டிற்காண்டு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. இதன் விளைவாக, 2022இல் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறையானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8,139 மில்லியனிலிருந்து 2010இலிருந்தான தாழ்ந்த மட்டமான ஐ.அ.டொலர் 5,185 மில்லியனிற்கு சுருக்கமடைந்தது. ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையின் வீழ்ச்சிக்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1 இல் காட்டப்பட்டுள்ளன.

**வரைபடம் 1: 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையின் மாற்றத்திற்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ மில்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் வர்த்தக மீதி

வணிகப்பொருள் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது ஏற்றுமதிகளின் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளின் பாரியளவிலான வீழ்ச்சியொன்றினால் துணையளிக்கப்பட்டு 2021 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,085 மில்லியனிலிருந்து 2022 திசெம்பரில் ஐ.அ.டொலர் 358 மில்லியனிற்குச் சுருக்கமடைந்தது.

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்[1]

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 திசெம்பரிலும் பார்க்க 2022 திசெம்பரில் ஐ.அ.டொலர் 1,068 மில்லியனிற்கு 7.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** 2022 திசெம்பரில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாகப் பங்களித்திருந்தது.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** உயர் பணவீக்கத்துடன் தொடர்புபட்ட குறைவடைந்த செலவளிக்கத்தக்க இயலளவு மற்றும் அநேகமான முக்கிய சந்தைகளின் (ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம்) குறிப்பிடத்தக்க பின்னடைவு கரிசனைகள் என்பவற்றிலிருந்து தோற்றம்பெற்ற ஆடைகளின் குறைந்தளவிலான ஏற்றுமதிகளின் காரணமாக கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் வீழ்ச்சியடைந்தன. அதேபோல், டயர்கள் மற்றும் வீட்டுப்பாவனைக்கான இறப்பர் கையுறைகள் என்பவற்றின் குறைந்தளவிலான ஏற்றுமதிகளின் காரணமாக இறப்பர் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. மேலும், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் பொறி மற்றும் பொறியியல் சாதனங்கள் (முக்கியமாக, இலத்திரனியியல் சாதனங்கள்) என்பவற்றின் வருவாய்கள் அதிகரித்தபோதிலும் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை (முக்கியமாக, பதப்படுத்தப்படாத புகையிலை) என்பவற்றின் ஏற்றுமதிகளில் கணிசமானளவிலான வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டிருந்தது.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** போதியளவிலான வளமாக்கிகளின் கிடைப்பனவின்மையின் காலங்கடந்த விளைவிலிருந்து தோற்றம்பெற்ற ஏற்றுமதி செய்யப்பட்ட அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியானது தேயிலையின் உயர்ந்தளவிலான சராசரி விலைகளினால் எதிரீடு செய்யப்பட்டு தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. வாசனைத்திரவியங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மிளகின் குறைந்தளவிலான ஏற்றுமதி அளவுகளின் விளைவாக, ஏனைய வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் வீழ்ச்சியடைந்தன.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** தைட்டானிய தாதின் ஏற்றுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் அதிகரித்துக் காணப்பட்டன.

**வரைபடம் 3: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

[1] இலங்கை மத்திய வங்கியின் ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு II மற்றும் இணைப்பு III இல் காட்டப்பட்டுள்ளன.

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[2]

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2021 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,241 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் ஐ.அ.டொலர் 1,426 மில்லியனிற்கு 36.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, 2022 மாச்சிலிருந்து அவதானிக்கப்பட்ட ஆண்டிற்காண்டு வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கினைத் தொடர்ந்தது.** 2021 திசெம்பரில் காணப்பட்ட உயர்ந்தளவிலான தளம் மற்றும் சகல முக்கிய துறைகளினதும் அளவுகளில் காணப்பட்ட வீழ்ச்சிகள் என்பன இப்பெறுபேற்றினைத் தோற்றுவித்தன.

**நுகர்வுப் பொருட்கள்:** மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட குறைப்பினால் உந்தப்பட்ட (2021 திசெம்பரில் கொவிட் தடுப்பு மருந்துகள் மீதான உயர்ந்தளவிலான செலவினத்தின் தளத் தாக்கம்) உணவல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் வீழ்ச்சியடைந்தது. மேலும், அவசரமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளின் பகுதியளவின் காரணமாக அநேகமாக சகல ஏனைய உணவல்லா நுகர்வுப் பொருட்களும் வீழ்ச்சியடைந்தன. குறைந்தளவிலான தானியங்கள் மற்றும் ஆலைக் கைத்தொழில் உற்பத்திகளினால் (முக்கியமாக, அரிசி) உந்தப்பட்டு, உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினமும் 2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

**இடைநிலைப் பொருட்கள்:** அடிப்படை உலோகங்கள் (முதன்மையாக 2021 திசெம்பரில் இரும்பு மற்றும் உருக்கு என்பவற்றின் உயர்ந்தளவிலான இறக்குமதிகளின் தளத் தாக்கம்) மற்றும் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் (முதன்மையாக துணிகள்) என்பவற்றின் தாழ்ந்தளவிலான இறக்குமதிகளினால் உந்தப்பட்டு இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட குறைந்தளவிலான அளவுகளின் முக்கிய காரணமாக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி என்பன மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிகளுடன் இவ்வகைப்பாட்டின் கீழான பாரியளவிலான இறக்குமதிக் கூறான எரிபொருள் மீதான செலவினமும் 2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. மாறாக, 2021 திசெம்பரிலும் பார்க்க உயர்ந்தளவிலான இறக்குமதி அளவுகள் காரணமாக வளமாக்கிகள் மீதான இறக்குமதிச் செலவினம் 2022 திசெம்பரில் 213.8 சதவீதத்தினால் (ஐ.அ.டொலர் 115.8 மில்லியன்) குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்டது.

**முதலீட்டுப் பொருட்கள்:** முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் 2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. சகல மூன்று முக்கிய முதலீட்டுப் பொருள் துணைத்துறைகளினதும் அதாவது, பொறி மற்றும் கருவிகள், கட்டடவாக்கப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்கள் கீழ் பட்டியலிடப்பட்ட அநேகமாக சகல வகைப் பொருட்களும் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.

[2] இலங்கை மத்திய வங்கியின் இறக்குமதிகளின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த இறக்குமதிகளின் வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு IV மற்றும் இணைப்பு Vஇல் காட்டப்பட்டுள்ளன.

**வரைபடம் 5: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: இறக்குமதிகளின் உள்ளடக்கம்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் வர்த்தகச் சுட்டெண்கள்

இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதமானது இறக்குமதி விலைகள் அதிகரித்த வேளையில் ஏற்றுமதி விலைகள் வீழ்ச்சியடைந்தமையினால் 2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் 13.3 சதவீதத்தினால் தேய்வடைந்தது. 2022இற்கான வர்த்தக மாற்று விகிதமானது 2021உடன் ஒப்பிடுகையில் 87.8 சுட்டெண் புள்ளிகளுக்கு 9.9 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

**வரைபடம் 7: வர்த்தக மாற்று விகிதம்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

2022 திசெம்பரில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 1.3 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) அதிகரித்த வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 8.9 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியடைந்தமையானது ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குத் தாழ்ந்தளவிலான ஏற்றுமதி விலைகள் பங்களித்திருந்தமையை எடுத்துக்காட்டியது. அதேவேளை, ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் ஆகிய இரண்டும் 2021உடன் ஒப்பிடுகையில் 2022இல் முறையே 1.9 சதவீதத்தினாலும் 2.9 சதவீதத்தினாலும் மேம்பட்டுக் காணப்பட்டன

**வரைபடம் 8: ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

2022 திசெம்பரில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 39.5 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 5.1 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) அதிகரித்தமையானது 2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் அளவுத் தாக்கத்தினால் முக்கியமாக உந்தப்பட்டு இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினை எடுத்துக்காட்டுகின்றது. 2021உடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 22.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 14.1 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது.

**வரைபடம் 9: இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய அபிவிருத்திகள்

**தொழிலாளர் பணவனுப்பல்கள்:** ஆண்டிறுதிக் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க மீட்சி அவதானிக்கப்பட்ட போதிலும் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 5,491 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 3,789 மில்லியனாக விளங்கி, 31.0 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்கள் முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 384 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 476 மில்லியனிற்கு அதிகரித்து, 2022 காலப்பகுதியில் உயர்ந்தளவிலான மாதாந்த பணவனுப்பல்களைப் பதிவுசெய்தன. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் 2022 காலப்பகுதியில் 299,934ஆகப் பதிவுசெய்யப்பட்டிருந்தமைக்கு தேர்ச்சியற்ற (101,786), தேர்ச்சிபெற்ற (88,215) மற்றும் வீட்டுப்பணிப் பெண்கள் (73,781) ஆகிய வகைகள் முக்கிய பங்களித்திருந்தன. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் 2022 திசெம்பர் மாத காலப்பகுதியில் 23,407ஆக பதிவுசெய்யப்பட்டது.

**சுற்றுலாப் பயணிகள்:** 2021இல் பதிவுசெய்யப்பட்ட 194,495 சுற்றுலாப் பயணிகளின் வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2022இல் மொத்தமாக 719,978 சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் பதிவுசெய்யப்பட்டு, 2019இற்குப் பின்னர் உயர்ந்தளவிலான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளைப் பதிவுசெய்திருந்தன. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2022 நவெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 59,759 வருகைகளிலிருந்து 2022 திசெம்பரில் 91,961இற்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்டன. 2022 திசெம்பரில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக ருஷியா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா மற்றும் ஜேர்மனி என்பன காணப்பட்டன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 507 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 1,136 மில்லியனாக[3] மதிப்பிடப்பட்டுள்ளன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 81 மில்லியனுடனும்[3] முன்னைய ஆண்டின் திசெம்பர் மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 233 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2022இன் தொடர்புடைய மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 127 மில்லியனாக[3] மதிப்பிடப்பட்டுள்ளன.

**வரைபடம் 10: மாதாந்த சுற்றுலாப் பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 11: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
உரிமம்பெற்ற வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி

[3] 2022இல் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டுள்ளன.

## நிதியியல் பாய்ச்சல்கள்

அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2022 திசெம்பரில் சிறியளவிலான தேறிய உட்பாய்ச்சலொன்றுடன் 2022 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 51 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, ஒன்றுசேர்ந்த அடிப்படையில், முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது 2022 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 182 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2022 திசெம்பரில் குறிப்பிடத்தக்க தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

2022 திசெம்பர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 1.9 பில்லியனாக விளங்கின. இது பயன்படுத்தக்கூடிய தன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.4 பில்லியனிற்கு நிகரான சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது. மத்திய வங்கி 2022 திசெம்பரில் சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய உள்ளீர்ப்பொன்றினைப் பதிவுசெய்தமையானது 2022 திசெம்பர் இறுதியில் திரவ ஒதுக்குகளின் சிறியளவிலானதொரு மேம்பாட்டினைத் தோற்றுவித்தது.

**வரைபடம் 12: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**2022 மே மாத நடுப்பகுதியிலிருந்தான நாளாந்த அனுமதிக்கத்தக்க வீச்சின் அறிமுகத்தினைத் தொடர்ந்து 2022 திசெம்பர் முழுவதும் செலாவணி வீதம் தொடர்ந்தும் நிலையாகக் காணப்பட்டது.** 2022 காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக ரூபாவின் வருடாந்த தேய்மானம் 44.8 சதவீதமாக விளங்கியதுடன் குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2022 காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது யூரோ, அவுஸ்திரேலிய டொலர், இந்திய ரூபா, ஸ்ரேலிங் பவுன் மற்றும் யப்பானிய யென் என்பவற்றிற்கெதிராக தேய்வடைந்தது. அதேவேளை, 2023 சனவரி 31 வரையான ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 0.3 சதவீத உயர்வொன்றினைப் பதிவுசெய்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2023 சனவரி 31 வரையான ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது யூரோ, ஸ்ரேலிங் பவுன், இந்திய ரூபா, அவுஸ்திரேலிய டொலர் மற்றும் யப்பானிய யென் என்பவற்றிற்கெதிராக தேய்வடைந்தது. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமானது (REER 24) 2022 மாச்சு தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு தேய்வடைந்து காணப்பட்டதுடன் 100 சுட்டெண் புள்ளிகளின் மட்டத்திற்குப் பெருமளவு கீழால் தொடர்ந்தும் காணப்பட்டமையானது இலங்கையின் வெளிநாட்டுத்துறைப் போட்டித்தன்மையில் மேம்பாடொன்றினைக் குறித்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 13: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 14: 24 நாணய உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு***

| நாணயம் | 2021 | 2022 | 2023 (சனவரி 31 வரை) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -7.0% | -44.8% | +0.3% |
| யூரோ | +1.1% | -41.4% | -1.6% |
| ஸ்ரேலிங் பவுன் | -6.0% | -38.1% | -2.3% |
| யப்பானிய யென் | +3.8% | -36.4% | -1.6% |
| அவுஸ்திரேலிய டொலர் | -1.2% | -40.8% | -3.8% |
| இந்திய ரூபா | -5.5% | -38.6% | -1.2% |

*தேய்வு (-)/உயர்வு (+)

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**2023 சனவரிக்கான வெளிநாட்டுத்துறைப் பத்திரிகை வெளியீடு 2023 பெப்புருவரி 28 அன்று வெளியிடப்படும்.**

**இணைப்பு I:**

## வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)

| வகை | திசெம்பர் 2021 ஐ.அ.டொ.மில் | திசெம்பர் 2022 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | 2021 ஐ.அ.டொ.மில் | 2022 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 1,156 | 1,068 | -7.7 | 12,499 | 13,106 | 4.9 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 2,241 | 1,426 | -36.4 | 20,637 | 18,291 | -11.4 |
| வர்த்தக மீதி | -1,085 | -358 | | -8,139 | -5,185 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 233 (ஆ) | 127 (இ) | -45.4 | 507 (ஆ) | 1,136 (இ) | - |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 325 | 476 | 46.3 | 5,491 | 3,789 | -35.9 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (ஈ) | 4 | 37 | | -238 | 182 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் (மொத்தம்) | 91 | 208 | | 2,435 | 2,259 (உ) | |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் | 1 | 7 | | 17 | 69 | |
| நீண்ட காலக் கடன்கள் | 348 | வி.கி | | 1,608 | 2,190 (உ) | |
| கூட்டுக் கடன்கள் | - | - | | 810 | - | |
| திரண்ட நிலுவை | | | | -3,967 | -2,773 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) 2021 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றுக்கு சராசரி செலவிடும் மதிப்பீடுகளின் அடிப்படையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது
(இ) இத்தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2022 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது
(உ) நீண்ட காலக் கடன்களிற்கான ஒன்றுசேர்ந்த தரவுகள் 2022 நவெம்பர் வரையான வெளிநாட்டுக் கடன்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ளன.

**இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
https://www.cbsl.gov.lk/ta/node/6181

**இணைப்பு II:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | திசெம்பர் 2021 (ஐ.அ.டொ. மில்) | திசெம்பர் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2021 (ஐ.அ.டொ. மில்) | 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **916.8** | **840.9** | **-8.3** | **9,702.1** | **10,465.3** | **7.9** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 57.4 | 36.7 | -36.0 | 586.9 | 519.5 | -11.5 |
| விலங்குத்தீன் | 12.3 | 19.0 | 54.0 | 149.4 | 170.5 | 14.1 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 533.2 | 481.5 | -9.7 | 5,435.1 | 5,952.0 | 9.5 |
| இதில் ஆடைகள் | 484.8 | 442.6 | -8.7 | 4,951.5 | 5,483.1 | 10.7 |
| புடவைகள் | 38.9 | 29.8 | -23.3 | 355.4 | 353.7 | -0.5 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 9.5 | 9.1 | -4.0 | 128.1 | 115.2 | -10.1 |
| இறப்பர் உற்பத்திகள் | 90.3 | 71.2 | -21.1 | 1,050.4 | 977.0 | -7.0 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 23.4 | 35.3 | 51.1 | 276.8 | 450.6 | 62.8 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 43.2 | 50.5 | 16.9 | 500.9 | 580.9 | 16.0 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 9.6 | 6.5 | -32.4 | 148.2 | 129.3 | -12.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 51.0 | 49.4 | -3.1 | 506.4 | 568.0 | 12.2 |
| இரசாயன உற்பத்திகள் | 21.7 | 16.1 | -25.6 | 223.2 | 223.5 | 0.1 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 12.0 | 9.9 | -17.6 | 129.9 | 136.9 | 5.4 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 2.5 | 9.8 | 286.5 | 50.0 | 53.1 | 6.1 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 6.4 | 7.4 | 16.5 | 58.4 | 85.8 | 46.9 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.3 | 3.9 | -37.9 | 78.6 | 60.9 | -22.5 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 15.1 | 12.6 | -16.1 | 156.4 | 176.7 | 13.0 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 3.0 | 2.7 | -8.9 | 37.4 | 38.1 | 1.8 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 29.5 | 28.2 | -4.6 | 314.1 | 342.4 | 9.0 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **232.3** | **203.4** | **-12.4** | **2,729.5** | **2,568.0** | **-5.9** |
| தேயிலை | 110.6 | 107.3 | -3.0 | 1,324.4 | 1,258.8 | -5.0 |
| இறப்பர் | 3.2 | 3.2 | 0.2 | 42.2 | 41.4 | -1.8 |
| தேங்காய் | 31.4 | 24.8 | -21.0 | 425.2 | 400.3 | -5.9 |
| வாசனைத்திரவியங்கள் | 43.7 | 31.3 | -28.2 | 454.8 | 368.7 | -18.9 |
| காய்கறிகள் | 2.3 | 2.2 | -4.9 | 28.5 | 26.7 | -6.6 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.1 | 2.4 | 14.9 | 31.6 | 24.4 | -22.8 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 12.4 | 10.9 | -12.1 | 148.8 | 178.8 | 20.2 |
| கடலுணவு | 26.7 | 21.3 | -20.0 | 274.1 | 269.0 | -1.8 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **5.1** | **20.9** | **314.6** | **44.5** | **50.0** | **12.3** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **2.1** | **2.4** | **12.1** | **22.5** | **23.2** | **3.2** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,156.3** | **1,067.6** | **-7.7** | **12,498.6** | **13,106.4** | **4.9** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு III:**

**நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | திசெம்பர் 2021 (ஐ.அ.டொ. மில்) | திசெம்பர் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2021 (ஐ.அ.டொ. மில்) | 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **246.0** | **224.0** | **-8.9** | **2,846.0** | **2,701.8** | **-5.1** |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 31.2 | 24.0 | -23.1 | 316.0 | 301.2 | -4.7 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 6.2 | 6.5 | 4.2 | 71.8 | 77.5 | 7.9 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 38.4 | 30.2 | -21.5 | 468.2 | 449.0 | -4.1 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 150.3 | 139.1 | -7.5 | 1,742.9 | 1,611.1 | -7.6 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **17.6** | **11.1** | **-37.1** | **145.2** | **135.8** | **-6.5** |
| 11 குடிபானங்கள் | 3.4 | 2.7 | -20.1 | 33.3 | 46.7 | 40.2 |
| 12 புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 14.2 | 8.4 | -41.1 | 112.0 | 89.2 | -20.4 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **36.1** | **46.8** | **29.8** | **433.2** | **450.3** | **3.9** |
| 23 மசகு இறப்பர் | 3.3 | 3.3 | -1.0 | 43.1 | 42.4 | -1.5 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 17.4 | 13.4 | -23.1 | 240.3 | 228.6 | -4.9 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **51.0** | **49.4** | **-3.1** | **506.4** | **568.0** | **12.2** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 51.0 | 41.3 | -18.9 | 462.9 | 544.1 | 17.5 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | - | 8.1 | - | 43.5 | 23.9 | -44.9 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **11.7** | **4.8** | **-58.6** | **128.9** | **89.9** | **-30.3** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 6.9 | 4.8 | -30.4 | 86.1 | 75.4 | -12.4 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **29.7** | **18.4** | **-38.0** | **291.7** | **271.5** | **-6.9** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **155.0** | **144.5** | **-6.8** | **1,700.7** | **1,876.0** | **10.3** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 60.6 | 49.7 | -18.0 | 684.5 | 680.3 | -0.6 |
| 65 புடவை நூழிழை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 44.8 | 36.7 | -18.1 | 458.4 | 447.1 | -2.5 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 29.3 | 40.1 | 36.6 | 335.1 | 510.5 | 52.3 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **51.6** | **55.5** | **7.6** | **631.8** | **692.1** | **9.5** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 27.6 | 30.9 | 12.1 | 318.4 | 364.2 | 14.4 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **557.4** | **513.0** | **-8.0** | **5,813.1** | **6,320.3** | **8.7** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 519.1 | 469.4 | -9.6 | 5,360.0 | 5,832.0 | 8.8 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.2** | **-** | **-** | **1.5** | **0.8** | **-47.7** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,156.3** | **1,067.6** | **-7.7** | **12,498.6** | **13,106.4** | **4.9** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை
... புறக்கணிக்கத்தக்கவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு IV:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)**

| வகை | திசெம்பர் 2021 (ஐ.அ.டொ. மில்) | திசெம்பர் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2021 (ஐ.அ.டொ. மில்) | 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **419.3** | **241.5** | **-42.4** | **3,848.7** | **2,813.0** | **-26.9** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 171.2 | 129.9 | -24.1 | 1,666.5 | 1,607.9 | -3.5 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 50.9 | 26.5 | -47.9 | 97.4 | 430.5 | 342.3 |
| பால் உற்பத்திகள் | 14.1 | 20.5 | 45.6 | 317.7 | 225.3 | -29.1 |
| காய்கறிகள் (ஆ) | 33.2 | 21.3 | -36.0 | 384.3 | 318.4 | -17.1 |
| கடலுணவு | 10.2 | 3.6 | -65.2 | 122.3 | 66.4 | -45.7 |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 33.4 | 34.3 | 2.7 | 288.8 | 257.8 | -10.7 |
| வாசனைத்திரவியங்கள் | 7.0 | 12.1 | 71.9 | 127.2 | 136.6 | 7.4 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 22.4 | 11.7 | -47.8 | 328.8 | 172.8 | -47.4 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 248.1 | 111.6 | -55.0 | 2,182.2 | 1,205.1 | -44.8 |
| தனியாள் ஊர்திகள் | 0.6 | 3.5 | 512.1 | 12.8 | 11.7 | -8.5 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 128.5 | 57.8 | -55.0 | 882.5 | 533.4 | -39.6 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 21.5 | 3.9 | -81.7 | 257.1 | 85.5 | -66.7 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 23.4 | 14.8 | -36.7 | 221.3 | 215.6 | -2.6 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 31.0 | 5.3 | -82.9 | 382.9 | 69.0 | -82.0 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 16.7 | 10.8 | -35.1 | 161.2 | 116.3 | -27.9 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 26.5 | 15.4 | -41.7 | 264.4 | 173.7 | -34.3 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,368.3** | **983.8** | **-28.1** | **12,308.9** | **12,438.8** | **1.1** |
| எரிபொருள் | 442.5 | 383.5 | -13.3 | 3,742.9 | 4,896.8 | 30.8 |
| இதில் மசகெண்ணெய் | 59.7 | 67.9 | 13.7 | 625.1 | 483.8 | -22.6 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 339.9 | 300.5 | -11.6 | 2,840.0 | 4,048.2 | 42.5 |
| நிலக்கரி | 42.9 | 15.1 | -64.7 | 277.8 | 364.8 | 31.3 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 13.8 | 16.6 | 20.3 | 143.6 | 203.8 | 41.9 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 297.9 | 200.9 | -32.6 | 3,066.9 | 3,065.2 | -0.1 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 37.6 | 33.9 | -9.9 | 468.9 | 465.9 | -0.6 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 22.8 | 18.6 | -18.6 | 264.2 | 214.5 | -18.8 |
| கோதுமை மற்றும் சோளம் | 30.2 | 35.8 | 18.5 | 418.3 | 303.1 | -27.5 |
| அடிப்படை உலோகங்கள் | 187.5 | 13.5 | -92.8 | 866.4 | 323.2 | -62.7 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 77.6 | 41.8 | -46.2 | 765.7 | 650.8 | -15.0 |
| இரசாயன உற்பத்திகள் | 99.9 | 65.1 | -34.8 | 1,074.4 | 966.2 | -10.1 |
| வளமாக்கி | 36.9 | 115.8 | 213.8 | 158.2 | 275.9 | 74.4 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 39.2 | 12.1 | -69.0 | 400.7 | 334.7 | -16.5 |
| கனிம உற்பத்திகள் | 13.8 | 4.9 | -64.7 | 158.9 | 123.7 | -22.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 68.4 | 41.3 | -39.6 | 779.7 | 615.0 | -21.1 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **452.9** | **200.0** | **-55.8** | **4,462.7** | **3,030.5** | **-32.1** |
| பொறி மற்றும் கருவிகள் | 307.7 | 130.0 | -57.8 | 2,809.5 | 1,969.0 | -29.9 |
| கட்டடப் பொருட்கள் | 124.1 | 62.4 | -49.7 | 1,248.9 | 926.3 | -25.8 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 20.8 | 7.6 | -63.6 | 398.5 | 132.1 | -66.8 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.3 | 0.1 | -75.0 | 5.8 | 3.0 | -47.9 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.5** | **0.3** | **-49.5** | **17.1** | **8.8** | **-48.8** |
| **மொத்த இறக்குமதிகள்** | **2,241.0** | **1,425.6** | **-36.4** | **20,637.4** | **18,291.0** | **-11.4** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,798.5** | **1,042.0** | **-42.1** | **16,894.6** | **13,394.2** | **-20.7** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது
… புறக்கணிக்கத்தக்கவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு V:**

## நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | திசெம்பர் 2021 (ஐ.அ.டொ. மில்) | திசெம்பர் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2021 (ஐ.அ.டொ. மில்) | 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **230.2** | **188.5** | **-18.1** | **2,275.2** | **2,162.2** | **-5.0** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 14.1 | 20.6 | 45.8 | 318.1 | 225.7 | -29.1 |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 10.4 | 3.7 | -64.5 | 123.6 | 67.7 | -45.2 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 80.7 | 61.9 | -23.4 | 513.0 | 729.0 | 42.1 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 42.0 | 25.3 | -39.9 | 457.7 | 365.4 | -20.2 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 33.4 | 34.3 | 2.7 | 288.9 | 257.8 | -10.7 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 12.1 | 16.1 | 33.1 | 169.5 | 180.0 | 6.2 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **7.8** | **7.8** | **…** | **76.8** | **101.0** | **31.5** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **56.3** | **23.1** | **-59.0** | **584.7** | **465.3** | **-20.4** |
| 23 மசகு இறப்பர் | 34.0 | 8.7 | -74.4 | 351.0 | 283.6 | -19.2 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 2.7 | 1.7 | -37.2 | 25.0 | 30.5 | 22.2 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **442.5** | **383.5** | **-13.3** | **3,742.9** | **4,896.8** | **30.8** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 378.5 | 338.8 | -10.5 | 3,118.4 | 4,288.0 | 37.5 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 21.1 | 29.6 | 40.3 | 346.6 | 243.9 | -29.6 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **8.8** | **2.4** | **-72.8** | **285.2** | **79.8** | **-72.0** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 7.2 | 1.7 | -76.6 | 262.3 | 65.6 | -75.0 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **345.2** | **279.1** | **-19.2** | **2,847.9** | **2,392.2** | **-16.0** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 124.7 | 54.5 | -56.3 | 823.1 | 502.3 | -39.0 |
| 56 வளமாக்கி மற்றும் தயாரிக்கப்பட்டவை | 36.9 | 115.8 | 213.8 | 157.6 | 275.8 | 74.9 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 58.7 | 26.0 | -55.8 | 561.2 | 438.6 | -21.8 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 18.1 | 15.0 | -17.1 | 173.3 | 174.7 | 0.8 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **675.8** | **330.9** | **-51.0** | **5,976.8** | **5,114.1** | **-14.4** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 34.9 | 32.2 | -7.6 | 442.0 | 436.7 | -1.2 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 292.1 | 194.8 | -33.3 | 3,007.8 | 2,991.0 | -0.6 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 49.7 | 34.0 | -31.6 | 525.2 | 485.0 | -7.7 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 212.4 | 18.9 | -91.1 | 1,071.4 | 456.3 | -57.4 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **385.2** | **146.2** | **-62.0** | **3,876.2** | **2,278.1** | **-41.2** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 57.9 | 22.7 | -60.9 | 652.0 | 396.5 | -39.2 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 52.9 | 28.1 | -46.9 | 599.2 | 430.9 | -28.1 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 44.3 | 10.9 | -75.4 | 354.6 | 161.7 | -54.4 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 71.2 | 16.2 | -77.3 | 785.3 | 231.6 | -70.5 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 82.4 | 40.4 | -50.9 | 750.2 | 633.1 | -15.6 |
| 78 வீதி ஊர்திகளி | 21.4 | 12.3 | -42.8 | 327.8 | 158.2 | -51.7 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **88.6** | **63.8** | **-27.9** | **953.3** | **791.3** | **-17.0** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 19.4 | 13.3 | -31.7 | 190.0 | 191.5 | 0.8 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 17.8 | 12.5 | -29.7 | 237.7 | 143.2 | -39.7 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.7** | **0.2** | **-70.7** | **18.4** | **10.3** | **-44.3** |
| **மொத்த இறக்குமதிகள்** | **2,241.0** | **1,425.6** | **-36.4** | **20,637.4** | **18,291.0** | **-11.4** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf